16.03.2026

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 35/2026</u>

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | | |
| த/பெ | கங்காதரன் | | |
| கிராமம் | பெரும்பாக்கம் | தொழில் | தலைமை காவலர், |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் மதுவிலக்கு அமுல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 22/08/2025ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், தலைமை காவலராக பணியில் இருந்தபோது, நான், உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தலைமை காவலர் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை

முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை. மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது. மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில், உதவி ஆய்வாளர் அவர்கள் 15 - 10 மணிக்கு கைது செய்தார்கள். 15 - 15 மணிக்கு அவரை விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார். அதை உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், அதில் எதிரி, எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன்). மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் அவர்கள் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அதிலும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சான்று பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார். அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 173 உ/இ 24 (1),

6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எங்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த சம்பவம் தொடர்பாக எங்களது உதவி ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் வந்ததா? அல்லது நேரில் யார் மூலமாவது தகவல் வந்ததா? என்றால், நேரடியாக தான் தகவல் வந்தது. எனது விசாரணையில் ரகசிய தகவல் நேரில் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். அதுபோன்று எதையும் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் கிடைத்தவுடன் நானும் மற்றொரு காவலரும் ஒரே பைக்கிலும், உதவி ஆய்வாளர் மற்றொரு பைக்கிலும், சம்பவ இடம் சென்றோம். எம்.ஜி ரோடு எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு கடைகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் எங்களைப் பார்த்து ஓட ஆரம்பித்தவுடன் அவர்களை யார் மடக்கிப்பிடித்தது என்றால், உதவி ஆய்வாளரும், நாங்களும் மடக்கி பிடித்தோம். உதவி ஆய்வாளர் விசாரணையில் நான் எதிரிகளை நாங்களும், உதவி ஆய்வாளரும் மடக்கி பிடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லும் போது நாங்கள் உபகரணங்கள் எதையாவது எடுத்து சென்றோமா? என்றால், எதையும் எடுத்துச் செல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலும் சிசிடிவி கேமரா உள்ளது என்றும், அக்கம் பக்கத்திலும் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றும் சொன்னால், அதை நாங்கள் கவனிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டதா? அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா? என்றால், கையால் எழுதி விட்டு பிறகு காவல்நிலையத்தில் தட்டச்சு செய்தார்கள். கைப்பற்றிய பொருட்களை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து வந்தது என்றால், எங்களது காவல் நிலைய ஓட்டுனர் தான் எடுத்து வந்தார். அப்படி ஓட்டுனர் தான் எடுத்து வந்தார் என்ற தகவலை நான் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகாமையில் பள்ளிகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பள்ளிக்கூடங்கள் உள்ளது. அங்கு எதுவும் பள்ளிக்கூடங்கள் இல்லை என்றும் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி எங்களிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சௌந்தர்ராஜன்

என்பவர் தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் இந்த சம்பவம் தொடர்பாக உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>**2**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1-ம் எதிரியை கைது செய்ததற்குப் பிறகு, அவரை அழைத்துக்கொண்டு நானும், என்னுடன் இருந்த மற்றொரு காவலரும், உதவி ஆய்வாளரும், 2-ம் எதிரியின் இருப்பிடத்திற்கோ, அல்லது சம்பவ இடத்திற்கோ, செல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 2ம் எதிரியின் பெயரை நாங்கள் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். 2ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u>

<u>இல்லை.</u>